# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2022 ஆம் ஆண்டு மாதம் நாள் 28.03.2022 திங்கட்கிழமை காலை 10.15 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள்: 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மையஅலுவலகம் இயங்கி வரும் கட்டிடமானது, திருச்சிராப்பள்ளி நகராட்சியாக இருந்த போது, 29.12.1963ம் தேதியன்று கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. அரசாணை எண்.109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.03.1994ன் படி, திருச்சிராப்பள்ளி நகராட்சி, மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மையஅலுவலகம் இக்கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

மையஅலுவலகத்தில் மாண்புமிகு மேயர் அறை, மாண்புமிகு மேயர் கூட்ட அரங்கு, மாமன்ற கூட்ட மண்டபம், துணை மேயர் அறை, ஆணையர் அறை, ஆணையர் கூட்ட அரங்கு, நகரப்பொறியாளர் அறை, பொறியியல் பிரிவு, நகர்நல அலுவலர் அறை, பொதுசுகாதார பிரிவு, உதவி ஆணையர்(கணக்கு), கணக்குப்பிரிவு, உதவி ஆணையர்(வருவாய்), வருவாய் பிரிவு, உதவி ஆணையர்(பணிகள்), பொதுப்பிரிவு அலுவலகம், நிர்வாக பொறியாளர்கள் அறை, திட்டப்பிரிவு, வரைவாளர்கள் பிரிவு, உதவி செயற்பொறியாளர்(இயந்திரம்), உள்ளாட்சி உடன்நிகழ் தணிக்கைத் துறை துணை இயக்குநர் அறை, தணிக்கை பிரிவு, வரிமேல்முறையீட்டு தீர்ப்பாயம், தேர்தல் சிறப்பு துணை வட்டாட்சியர் அறை, வரிவசூல் மையங்கள், கணினி கட்டுப்பாட்டு அறை, பொருட்கள் பாதுகாப்பு அறை மற்றும் இதர அலுவலகங்களும் இயங்கி வருகிறது.

மைய அலுவலக வளாகத்தின் மொத்தப் பரப்பளவு 210498.63 சதுரடி ஆகும், இதில் மையஅலுவலக கட்டுமானத்தின் மொத்தப் பரப்பளவு 27057.10 சதுரடி ஆகும்.

இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 58 வருடங்கள் கடந்து விட்டதாலும், திருச்சிராப்பள்ளி மாநகரம் வளர்ச்சியடைந்து வருவதாலும், மையஅலுவலகத்திற்கு பொதுமக்கள் வருகை அதிகமாக இருப்பதாலும், தற்போது 65 வார்டு உறுப்பினர்கள் அமரும் வகையில் மாமன்ற கூட்ட அறை மேம்படுத்தப்பட வேண்டியுள்ளதாலும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வுக்கூட்டம் நடத்துவதற்கு போதுமான கூட்ட அறை இல்லாமல் இருப்பதாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வந்து செல்வதற்கு போதுமான இடவசதி இல்லாமல் இருப்பதாலும், இவ்வலுவக வளாகத்திற்குள் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாடு மையம் அமைக்கப்பட்டுள்ளதாலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டு, மைய அலுவலகத்தின் வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

எனவே மைய அலுவலகத்தினை மேம்படுத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ.40.00 கோடி ஆகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியினை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டு, மையஅலுவலகத்தினை மேம்படுத்துவதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ .40.00 கோடியினை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துரு அனுப்பி வைப்பதற்கு அனுமதி அளிக்கலாம்.

**இ1/3440/2022(மையம்)**

தீர்மானம் : 1 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்: 2**

திருச்சிராப்பள்ளி நகராட்சி 01.06.1994 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு பின்வருமாறு நான்கு கோட்டங்களாக பிரிக்கப்பட்டு, வார்டு பொதுமக்களுக்கான அடிப்படை மற்றும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. ஸ்ரீரங்கம் கோட்டம் – 15 வார்டுகள்.
2. அரியமங்கலம் கோட்டம் – 18 வார்டுகள்.
3. கோ.அபிஷேகபுரம் கோட்டம் – 15 வார்டுகள்.
4. பொன்மலைக் கோட்டம் – 17 வார்டுகள்.

பொதுமக்களுக்கான அடிப்படை தேவைகளை எளிதில் நிறைவேற்றுவதற்கும், பொதுமக்கள் மாநகராட்சி அலுவலர்களை எளிதில் தொடர்பு கொள்வதற்கும், மேற்கண்ட நான்கு கோட்டங்கள், அரசாணை எண்.126 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.07.12.2021ன் படி, பின்வருமாறு ஐந்து வார்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

- வார்டு குழு அலுவலகம் I – 13 வார்டுகள் –
  1, 2, 3, 4, 5, 6, 7, 12, 13, 14, 15, 17, 21
- வார்டு குழு அலுவலகம் II– 13 வார்டுகள் –
  18, 19, 20, 30, 31, 32, 33, 34, 47, 48, 49, 50, 59
- வார்டு குழு அலுவலகம் III– 13 வார்டுகள் –
  16, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46
- வார்டு குழு அலுவலகம் IV– 13 வார்டுகள் –
  51, 52, 53, 54, 56, 57, 58, 60, 61, 62, 63, 64, 65
- வார்டு குழு அலுவலகம் V– 13 வார்டுகள் –
  8, 9, 10, 11, 22, 23, 24, 25,26, 27, 28, 29, 55

மேற்கண்ட வார்டு குழு 1 அலுவலகம் ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலகத்திலும், வார்டு குழு 2 அலுவலகம் அரியமங்கலம் கோட்ட அலுவலகத்திலும், வார்டு குழு 4 அலுவலகம் பொன்மலை கோட்ட அலுவலகத்திலும் மற்றும் வார்டு குழு 5 அலுவலகம் கோ.அபிஷேகபுரம் கோட்ட அலுவலகத்திலும் செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. வார்டு குழு 3 அலுவலகம் செயல்படுவதற்கு புதிதாக கட்டிடம் தேவைப்படுகிறது.

வார்டு குழு 3 அலுவலகம், தற்போது புதிய வார்டு 36 (பழைய வார்டு எண்.29), ஜெகநாதபுரம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாக பகுதியில், கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி நீர்தேக்கத் தொட்டி வளாகத்தின் மொத்த பரப்பளவு 32745 சதுர அடி ஆகும், இதில் தரைத்தளத்தில் இளநிலைப்பொறியாளர் அறை, சுகாதாரப்பிரிவு, வருவாய் பிரிவு அலுவலகங்கள் தரைத்தளத்தில் 1237.50 சதுரடி பரப்பளவில் அமைந்துள்ளது. முதல் தளத்தில் 1119.25 சதுரடி பரப்பளவில் கட்டிடம் உள்ளது.

எனவே வார்டு குழு 3க்குட்பட்ட, 13 வார்டு பொதுமக்களின் அடிப்படை தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி தருவதற்கும், பொதுமக்களை எளிதில் அணுகுவதற்கும், 13 வார்டு மாமன்ற உறுப்பினர்கள் வந்து செல்வதற்கும், வார்டு குழு கூட்ட அரங்கு மற்றும் வார்டு குழு அலுவலகம் செயல்படுவதற்கு தேவையான இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எனவே வார்டு குழு 3 அலுவலக கட்டிடம் கட்டவும், இதர உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவதற்கு தோராயமாக ரூ.2.50 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்வதற்கும், இப்பணிக்கான நிதியினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் கேட்டு பெறுவதற்கும் மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் உரிய கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அரசாணையின்படி ஐந்து வார்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளதில், நான்கு வார்டு குழு அலுவலகத்திற்கு கட்டிடம் மற்றும் அதற்கான அலுவலகங்கள் உள்ளது. வார்டு குழு 3 அலுவலகத்திற்கான கட்டிடத்தினை புதிய வார்டு 36 (பழைய வார்டு எண்.29), ஜெகநாதபுரம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாக பகுதியில் புதிதாக கட்டுவதற்கு அனுமதி அளிக்கலாம்.

2. இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் இப்பணிக்கான நிதியினை அரசிடமிருந்து கேட்டு பெறுவதற்கும் கருத்துரு அனுப்பி வைக்க அனுமதி அளிக்கலாம்.

இ3/ 3457 /2022(மையம்)

**தீர்மானம்** : 2 வார்டு குழு அலுவலகம் I க்குட்பட்ட 13 வார்டுகளில் 17 என்பதற்கு பதிலாக 19 என்றும் வார்டு குழு அலுவலகம் II க்கு உட்பட்ட 13 வார்டுகளில் 19 என்பதற்கு பதிலாக 17 என்ற திருத்தத்துடன் அலுவலக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்:3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணியினை நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | அரசு மான்யம் ரூ. லட்சத்தில் | பொது மக்களின் பங்களிப்பு ரூ. லட்சத்தில் | பங்களிப்பாளர் விபரம் மற்றும் காசோலை பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | பொன்மலை கோட்டம், வார்டு எண்.46 எஸ்.பி.ஐ.காலனி, வின்பாரடைஸ் பகுதியில் நவீன இறகுபந்து உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி மேற்கொள்ளுதல் (50% Contribution) | 31.00 | 15.50 | 15.50 | எஸ்.பி.ஐ.காலனி குடியிருப்போர் நலச்சங்கம், வின்பாரடைஸ், கண்டோன்மெண்ட், திருச்சி.1<br>ரூ.2,00,000/- ஹெச்.டி.எப்.சி.வங்கி, கண்டோன்மெண்ட், திருச்சி காசோலை எண்.000174 / 14.02.2022<br>ரூ.2,00,000/- ஹெச்.டி.எப்.சி.வங்கி, கண்டோன்மெண்ட், திருச்சி காசோலை எண்.000484 / 14.02.2022<br>ரூ.2,00,000/- .கரூர் வைஸ்யா வங்கி, கருமண்டபம், திருச்சி காசோலை எண்.000236 / 13.02.2022<br>ரூ.2,00,000/- .கரூர் வைஸ்யா வங்கி, தில்லைநகர், திருச்சி காசோலை எண்.000661 / 14.02.2022<br>ரூ.50,000/- பாரத ஸ்டேட் வங்கி, எஸ்.எம்.இ.கிளை, திருச்சி காசோலை எண்.258339 / 14.02.2022<br>ரூ.1,50,000/- பாரத ஸ்டேட் வங்கி, எஸ்.எம்.இ.கிளை, திருச்சி காசோலை எண்.258341 / 16.02.2022<br>ரூ.2,00,000/- பாரத ஸ்டேட் வங்கி, தென்னூர், திருச்சி காசோலை எண்.577443 / 16.02.2022<br>ரூ.75,000/- ஹெச்.டி.எப்.சி.வங்கி, கண்டோன்மெண்ட், திருச்சி காசோலை எண்.000012 / 15.02.2022<br>ரூ.2,00,000/- இந்தியன் .வங்கி, திருச்சி மெயின் காசோலை எண்.117785 / 01.03.2022<br>ரூ.75,000/- .கரூர் வைஸ்யா வங்கி, தில்லைநகர், திருச்சி காசோலை எண்.000662 / 01.03.2022 |

மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு திட்ட நெறிமுறைகளின்படி உரிய ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**இ3/ 10119 / 2021 (மையம்)**

**தீர்மானம்** : 3 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்.4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.64ல் D.மணிகண்டன் என்பவர் மனை எண்.18,19 **செல்லம் நகர்** என்ற விலாசத்தில் வசித்து வருவதாகவும், தனது காலிமனை வரி ரசீதில் **செல்வகுமரன்நகர்** எனத் தவறாக உள்ளது என்றும் மனை அமைந்துள்ள இடம் செல்லம் நகர் என்று திருத்தம் செய்வது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம் வார்டு எண்.64ல் செல்லம் நகர் வீட்டு மனை இடம் SF.No.14/2C திருவெறும்பூர் கிராமம், திருவெறும்பூர் தாலுக்கா திருச்சிராப்பள்ளி மாவட்டம் 226.48 சதுர அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைபிரிவு உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர் நவல்பட்டு புதுநகர் வளர்ச்சி குழுமம், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண் 291 / 2018/ ந.பு.வ.கு., நாள் 13.02.2019 (ம.வ.(வரன்முறை) ந.பு.வ.கு எண் 11 / 2019 ) என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்புத்துறை உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர் நவல்பட்டு புது நகர் வளர்ச்சி குழுமம், திருச்சிராப்பள்ளி அவர்களால் நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மனை பிரிவு மனைகள் உரிய கட்டணங்களை வரன்முறைக் கட்டணம், வளர்ச்சி கட்டணம் ஆகியவை பெறப்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

வார்டு எண்.64ல் காலிமனை வரிவிதிப்பதற்கு A மண்டலத்திலும் சொத்துவரி விதிப்பதற்கு C மண்டலத்திலும் நிர்ணயம் செய்ய உள்ளது. எனவே, செல்லம் நகரினை காலிமனை வரிவிதிப்பு மற்றும் சொத்துவரி விதிப்பிற்கும் கணினியில் பதிவேற்றம் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

வார்டு எண்.64ல் உள்ள செல்லம் நகர் பகுதியினை காலிமனை வரிவிதிப்பதற்கு A மண்டலத்திலும் சொத்துவரி விதிப்பதற்கு C மண்டலத்திலும் நிர்ணயம் செய்ய ஏதுவாக கணினியில் பதிவேற்றம் செய்து வரிவிதிப்பும் செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண் : அ6/ 000105/ 2022 (அரிய)**

தீர்மானம் : 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்: 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் பிறப்பு / இறப்பு சம்பந்தமான பதிவுகளை கணினி மயமாக்க ஏதுவாக பதிவிறக்கம் செய்யவும், இம்மாநகராட்சிக்கு பிற்காலத்தில் தேவைப்படும் ஆவணங்கள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் வரிவிதிப்பு தொடர்பான ஆவணங்கள் உள்ளிட்டவைகளை மைய மற்றும் வார்டு அலுவலகங்களில் பதிவேற்றம் செய்து கொள்ளத் தேவையான பணியாளர்களை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி தகுதியான நிறுவனத்தை தேர்வு செய்வது குறித்து தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண். 593, நாள். 24.12.2020ன் வாயிலாக அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 196 / 2020-21, நாள். 19.01.2021ன் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் M/s Alan Info Service (P) Ltd, Thillai Nagar, Trichy நிறுவனம் 0.02 சதவிகிதம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்தன் பேரில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண். 63, நாள். 12.02.2021 இல் 14 மனித ஆற்றல்களை கொண்டு கணினிப்பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதனை தொடர்ந்து தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 7162/2020/சி1(மை), நாள். 12.02.2021 இல் 14 மனித ஆற்றல்களை கொண்டு 12.02.2021 முதல் 28.02.2022 வரை பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனத்திற்கான ஒப்பந்தக்காலம் 28.02.2022 அன்று முடிவடையும் நிலையில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 19.02.2022 அன்று நடைபெறுவதாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் 26.01.2022 அன்று அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமுலுக்கு வந்ததால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலையில் M/s Alan Info Service (P) Ltd, Thillai Nagar, Trichy நிறுவனம் 01.03.2022 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.02.2022 அன்று ஒப்புதல் பெறப்பட்டதனை தொடர்ந்து தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 7162/2020/சி1(மை), நாள். 28.02.2022 ல் 01.03.2022 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை பணி நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது.

எனவே M/s Alan Info Service (P) Ltd, Thillai Nagar, Trichy நிறுவனத்திற்கு 01.03.2022 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை பணி நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

M/s Alan Info Service (P) Ltd, Thillai Nagar, Trichy நிறுவனத்திற்கு 01.03.2022 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை பணி நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 7162/2020/சி1(மை)**

தீர்மானம் : 5 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>பொருள்: 6</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை – அரியமங்கலம் உரக்கிடங்கில் திடக்கழிவுகளைக் கையாளும் பணிக்கு செயின் பொருத்தப்பட்ட எக்ஸ்கவேட்டர் லோடர் இயந்திரம் (Chain Mounted Excavator Loader) – 2 எண்கள் புதிதாக வாங்கும் பணிக்கு நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில், கலந்து கொண்ட M/s.Hyundai Construction Equipment India Pvt.Ltd., Pune. நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு விட்டது. எனவே M/s.Hyundai Construction Equipment India Pvt.Ltd., Pune. தேதிய கடிதத்தில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கு செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.2,40,000 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.9,96,787/–ஐ திரும்ப வழங்க கோரியுள்ளனர். மேற்கண்ட பணிக்கு தணிக்கைத் தடை ஏதும் எழுப்பப்படவில்லை.

எனவே ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்/ நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | பிணை வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை பிடித்தம் விபரம் | பிணை வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை – அரியமங்கலம் திடக்கழிவுகளைக் கையாளும் பணிக்கு பொருத்தப்பட்ட எக்ஸ்கவேட்டர் லோடர் இந்திரம் (Chain Mounted Excavator Loader) – 2 எண்கள் வழங்கும் பணி | 251/2017–18, நாள்.18.01.2018 | M/s.Hyundai Construction Equipment India Pvt.Ltd., Pune | EMD State Bank India No.275662, Dt.10.01.2018 | 2,40,000 | தொப்பு–X பக்கம் எண்–50 வ.எண் –811 |
| | | | | ASD State Bank India No.278839, Dt.03.04.2018 | 9,96,787 | தொப்பு–I பக்கம் எண்–6 வ.எண் –69 |
| | | | | **மொத்தம்** | **12,36,787** | |

மேற்கண்ட விபரப்படி M/s.Hyundai Construction Equipment India Pvt.Ltd., Pune. நிறுவனத்தாருக்கு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கு செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.2,40,000 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.9,96,787/–யை காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

M/s.Hyundai Construction Equipment India Pvt.Ltd., Pune. நிறுவனத்தாருக்கு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கு செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.2,40,000 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.9,96,787/–யை காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**E5/5672/2017(மையம்)**

தீர்மானம் : 6 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்: 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை – பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக, கனரக வாகனங்களுக்கு தேவையான புதிய டயர்கள், டியூப்கள் மற்றும் பிளாப்கள் கொள்முதல் செய்வதற்கு 27.09.2017ந் தேதிய ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இவ் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட M/s.JK Tyre & Industries, Chennai. நிறுவனத்தார் தொழில் நுட்ப தகுதி பெறாததால், ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

M/s.JK Tyre & Industries, Chennai. நிறுவனத்தாரின் 04.01.2022ந் தேதிய கடிதத்தில், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கு செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.37,000/–ஐ திரும்ப வழங்க கோரியுள்ளனர். மேற்கண்ட நிறுவனத்தாரின் பிணை வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்/ நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | பிணை வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை பிடித்தம் விபரம் | பிணை வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை – பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக, கனரக வாகனங்களுக்கு தேவையான புதிய டயர்கள், டியூப்கள் மற்றும் பிளாப்கள் – 107 எண்கள் வழங்கும் பணி | 129/2017–18, நாள்.27.09.2017 | M/s.JK Tyre & Industries, Chennai. | EMD State Bank India No.300012, Dt.08.09.2017 | 37,000 | தொப்பு–X பக்கம் எண்–33 வ.எண் –520 |
| | | | **மொத்தம்** | | **37,000** | |

மேற்கண்ட விபரப்படி M/s. JK Tyre & Industries, Chennai. நிறுவனத்தார், ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கு செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.37,000/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

M/s. JK Tyre & Industries, Chennai. நிறுவனத்தாருக்கு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கு செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.37,000 /–ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**E5/6561/2017(மையம்)**

தீர்மானம் : 7 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**மேயர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**